www.Padasalai.Net www.CBSEtips.in

லொயோலா

# ஈசி வரலாறு

# 11

## தொகுதி - I & II

**இணைப்பு: காலக்கோடு, வரைபடம்**

அரசு புதிய பாடத் திட்டத்தின்படி
விடைக் குறிப்பு (Key) அடிப்படையில்
தயாரிக்கப்பட்ட சிறப்பு நூல்.

www.Padasalai.Net

**Loyola Publications**

Vivek Illam, No. 19, Raj Nagar, N.G.O. 'A' Colony,
Palayamkottai, Tirunelveli - 627 007.
Ph: 0462 - 2553186
Cell : 94433 81701, 94422 69810, 90474 74696
81110 94696, 89400 02320, 89400 02321

₹. 250/-

Less Strain Score More

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

## நூலாக்கம்

லொயோலா பப்ளிகேஷன்

**Copy right : © LOYOLA PUBLICATION.**

All rights reserved. No part of this publication may be reproduced or distributed in any form or by any means, or stored in a data base or retrieval system without the prior written Permission of the publisher.

www.Padasalai.Net

ஆசிரியர்

திரு. **S. பாலசுப்ரமணியன்** M.A., B.Ed.,

முதுகலை வரலாறு ஆசிரியர்

Loyola Publications

★

www.Padasalai.Net www.CBSEtips.in

# பொருளடக்கம்

## தொகுதி - I


| பாடம் | தலைப்பு | பக்கம் எண் |
|---|---|---|
| 1. | பண்டைய இந்தியா: தொடக்கம் முதல் சிந்து நாகரிகம் வரை | 5 |
| 2. | பண்டைய இந்தியா: செம்புக்கால, பெருங்கற்கால, இரும்புக்கால, வேதகாலப் பண்பாடுகள் | 14 |
| 3. | பிரதேச முடியரசுகளின் தோற்றமும் புதிய மதப்பிரிவுகள் உருவாக்கமும் | 20 |
| 4. | அரசு மற்றும் பேரரசு உருவாக்கம் | 28 |
| 5. | தென்னிந்தியாவில் சமுதாய உருவாக்கம் | 36 |
| 6. | மௌரியருக்குப் பிந்தைய அரசியல் அமைப்பும் சமூகமும் | 42 |
| 7. | குப்தர் | 50 |
| 8. | ஹர்ஷர் மற்றும் பிரதேச முடியரசுகளின் எழுச்சி | 57 |
| 9. | தென்னிந்தியாவில் பண்பாட்டு வளர்ச்சி | 65 |
| 10. | அரபியர், துருக்கியரின் வருகை | 71 |
| 11. | பிற்காலச் சோழர்கள், பாண்டியர்கள் | 80 |
| | காலக்கோடு | 91 |
| | வரைபடம் | 93 |


www.Padasalai.Net



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

## தொகுதி - II



| பாடம் | தலைப்பு | பக்கம் எண் |
|---|---|---|
| 12. | பாமினி மற்றும் விஜய நகர அரசுகள் | 118 |
| 13. | பண்பாட்டு ஒருமைப்பாடு: இந்தியாவில் பக்தி இயக்கம் | 125 |
| 14. | முகலாயப் பேரரசு | 131 |
| 15. | மராத்தியர் | 141 |
| 16. | ஐரோப்பியரின் வருகை | 150 |
| 17. | ஆங்கிலேயர் ஆட்சியின் விளைவுகள் | 159 |
| 18. | ஆங்கிலேய ஆட்சிக்கு தொடக்ககால எதிர்ப்புகள் | 167 |
| 19. | நவீனத்தை நோக்கி | 174 |
| | காலக்கோடு | 180 |
| | வரைபடம் | 185 |
| | அரசுத் துணைத்தேர்வு - ஆகஸ்ட் 2022 | 195 |
| | அரசு பொதுத்தேர்வு - மார்ச் 2023 | 198 |



www.Padasalai.Net

★

www.Padasalai.Net www.CBSEtips.in



# பாடம் 1 பண்டைய இந்தியா : தொடக்கம் முதல் சிந்து நாகரிகம் வரை

## புத்தக வினாக்கள்

### I. சரியான விடையினைத் தேர்வு செய்க

1. எழுத்துகள் அறிமுகமாவதற்கு முந்தைய கால கட்டம் ................ எனப்படுகிறது. மே-2022
அ) வரலாற்றுக்கு முந்தைய காலம்
ஆ) வரலாற்றுக் காலம்
இ) பழங்கற்காலம்
ஈ) புதிய கற்காலம்
**விடை : அ) வரலாற்றுக்கு முந்தைய காலம்**

2. வரலாற்றின் பழமையான காலம் ........... ஆகும். செப்-2020 மார்ச்-2023
அ) பழங்கற்காலம் ஆ) புதிய கற்காலம்
இ) செம்புக்காலம் ஈ) இரும்புக்காலம்
**விடை : அ) பழங்கற்காலம்**

3. பழங்கற்காலக் கருவிகள் முதன் முதலில் ........ இல் அடையாளம் காணப்பட்டன. மார்ச்-2020
அ) 1860 ஆ) 1863
இ) 1873 ஈ) 1883
**விடை : ஆ) 1863**

4. மத்திய பிரதேசத்தில் உள்ள சன் பள்ளத்தாக்கில் உள்ள பாகோர் - 1, பாகோர் - 3, ஆகியவை ......... நாகரிகம் நிலவிய இடங்கள்
அ) கீழ்ப்பழங்கற்காலம் ஆ) இடைப்பழங்கற்காலம்
இ) மேல்பழங்கற்காலம் ஈ) புதிய கற்காலம்
**விடை : இ) மேல்பழங்கற்காலம்**

5. மெஹர்கார் .................. பண்பாட்டுடன் தொடர்புடையது.
அ) பழைய கற்காலப் ஆ) புதிய கற்காலப்
இ) இடைக்கற்காலப் ஈ) செம்புக்காலப்
**விடை : ஆ) புதிய கற்காலப்**

6. .......... கல்வெட்டுக் குறிப்புகள் மெசபடோமியாவுக்கும் ஹரப்பாவுக்கும் இடையேயான வணிகத் தொடர்புகளைக் குறிப்பிடுகின்றன. செப்-2020 ஆகஸ்ட்-2022
அ) க்யூனிபார்ம் ஆ) ஹைரோக்ளைபிக்ஸ்
இ) தேவநாகரி ஈ) கரோஷ்டி
**விடை : அ) க்யூனிபார்ம்**

7. பர்சஹோம் ................ நிலவிய இடமாகும்.
அ) காஷ்மீரின் புதிய கற்காலப் பண்பாடு
ஆ) கங்கைச் சமவெளியின் புதிய கற்காலப் பண்பாடு
இ) கிழக்கிந்தியாவின் புதிய கற்காலப் பண்பாடு
ஈ) தென்னிந்தியாவின் புதிய கற்காலப் பண்பாடு
**விடை : அ) காஷ்மீரின் புதிய கற்காலப் பண்பாடு**

8. தொடக்க ஹரப்பா காலகட்டம் என்பது ....... ஆகும்.
அ) பொ.ஆ.மு. 3000 - 2600
ஆ) பொ.ஆ.மு. 2600 - 1900
இ) பொ.ஆ.மு. 1900 - 1700
ஈ) பொ.ஆ.மு. 1700 - 1500
**விடை : அ) பொ.ஆ.மு. 3000 - 2600**

9. ஹரப்பா மக்களுக்கு முக்கியமான வாழ்வாதார வழிமுறையாக ........... இருந்தது. மார்ச்-2020
அ) வேளாண்மை
ஆ) மட்பாண்டம் செய்தல்
இ) கைவினைத் தொழில்கள்
ஈ) மீன் பிடித்தல்
**விடை : அ) வேளாண்மை**

10. சிந்து நாகரிகம் ஏறத்தாழ ............ இலிருந்து வீழ்ச்சி அடைந்தது.
அ) பொ.ஆ.மு. 1800 ஆ) பொ.ஆ.மு. 1900
இ) பொ.ஆ.மு. 1950 ஈ) பொ.ஆ.மு. 1955
**விடை : ஆ) பொ.ஆ.மு. 1900**

## கூடுதல் வினாக்கள்

1. செம்பு கற்காலத்தை தொடர்ந்து வந்த காலம் .......
அ) பழைய கற்காலம் ஆ) புதிய கற்காலம்
இ) இரும்புக்காலம் ஈ) இடைக்கற்காலம்
**விடை : இ) இரும்புக்காலம்**

2. ஹரப்பா பண்பாட்டின் துறைமுக நகரம் ...........
அ) காலிபங்கன் ஆ) லோத்தல்
இ) பணவாலி ஈ) ரூபார்
**விடை : ஆ) லோத்தல்**



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



3. **ஹரப்பாவின் முக்கியத்துவத்தையும் அதன் நாகரிகத்தையும் உணர்ந்து, அங்கு ஆய்வு நடத்தக் காரணமாக இருந்தவர் ................**
அ) சார்லஸ் மேசன்
ஆ) அலெக்ஸாண்டர் ப்ரன்ஸ்
இ) சர்ஜான் மார்ஷல்
ஈ) அலெக்சாண்டர் கன்னிங்காம்
**விடை : இ) சர்ஜான் மார்ஷல்**

4. **............. எனப்படும் படிகக்கல்லில் செய்யப்பட்ட கத்திகளை ஹரப்பா மக்கள் பயன்படுத்தினார்கள்.**
அ) குவார்ட் சைட் ஆ) கிரிஸ்டல்
இ) ரோரிசெர்ட் ஈ) ஜாஸ்பர்
**விடை : இ) ரோரிசெர்ட்**

5. **மனித இனத்தின் மூதாதையர் முதலில் .......... தோன்றி பின்னர் உலகத்தின் வெவ்வேறு பகுதிகளுக்கு சென்றனர்.**
அ) அமெரிக்காவில் ஆ) ஆஸ்திரேலியா
இ) இந்தியாவில் ஈ) ஆப்பிரிக்காவில்
**விடை : ஈ) ஆஸ்திரேலியா**

6. **ஹரப்பா பண்பாட்டில் ............ இல்லை.**
அ) மாடு ஆ) நாய்
இ) குதிரை ஈ) செம்மறி ஆடு
**விடை : இ) குதிரை**

7. **ஹரப்பா மக்கள் ............ அறிந்திருக்கவில்லை.**
அ) செம்பை ஆ) இரும்பை
இ) வெண்கலத்தை ஈ) தங்கத்தை
**விடை : ஆ) இரும்பை**

8. **ஹரப்பாவில் கிடைத்தவற்றில் மிக நீளமானதாகக் கருதப்படும் எழுத்துத் தொடர் ............. குறியீடுகளைக் கொண்டுள்ளது.**
அ) 26 ஆ) 36
இ) 16 ஈ) 46
**விடை : அ) 26**

9. **தற்கால மனிதனுக்கு நெருக்கமான தோற்றத்தைக் கொண்டிருந்த மனித மூதாதையர் ............ என்று அழைக்கப்படுகிறார்கள்.**
அ) நர்மதை மனிதன்
ஆ) ஹோமினின்
இ) ஹோமோ சேப்பியன்ஸ்
**விடை : ஆ) ஹோமினின்**

10. **ஹரப்பா நாகரிகம் ............. நாகரிகமாகும்.**
அ) இரும்புக்கால ஆ) பழங்கற்கால
இ) வெண்கலக்கால ஈ) புதிய கற்கால
**விடை : இ) வெண்கலக்கால**

11. **உணவு உற்பத்திக்கு வழி வகுத்த காலம்** மார்ச்-2019
அ) பழங் கற்காலம்
ஆ) வரலாற்றுக்கு முந்தைய காலம்
இ) புதிய கற்காலம்
ஈ) இடைக்கற்காலம்
**விடை : இ) புதிய கற்காலம்**

12. **பையம்பள்ளி ............ மாவட்டத்தில் அமைந்துள்ளது**
அ) தூத்துக்குடி ஆ) கோயம்புத்தூர்
இ) வேலூர் ஈ) திருநெல்வேலி
**விடை : இ) வேலூர்**

## II. குறுகிய விடையைத் தருக.

1. **வரலாற்றுக்கு முந்தைய காலத்துக்கான ஆய்வுக்கு உதவும் சான்றுகள் யாவை?** மார்ச்-2023
➢ வரலாற்றின் முந்தைய காலத்தைப் பற்றி அறிந்து கொள்வதற்கு எழுத்து வடிவிலான சான்றுகள் இல்லை.
➢ தொல்லியல் ஆய்வின் மூலம் கிடைத்துள்ள நிலவியல் அடுக்குகள், கற்கருவிகள், மட்பாண்ட ஓடுகள், எலும்புக் கருவிகள், உலோகக் கருவிகள், பாறை ஓவியங்கள், கைவினைப் பொருள்கள் ஆகியவை சான்றுகளாகும்.

2. **பழங்கற்காலம் எவ்வாறு பிரிக்கப்படுகிறது?** செப்-2020
வரலாற்றில் மிகவும் தொன்மையான காலம் பழங்கற்காலம் எனப்படுகிறது. இது மூன்றாகப் பிரிக்கப்படுகிறது. அவையாவன
➢ 1. கீழ்ப்பழங்கற்காலம்
2. இடைப்பழங்கற்காலம்
3. மேல் பழங்கற்காலம்

3. **ஹோமினின் குறித்து சிறு குறிப்பு வரைக.** மார்ச்-2020
➢ தற்கால மனிதனுக்கு நெருக்கமான தோற்றத்தைக் கொண்டிருந்த மனித மூதாதையர் ஹோமினின் என்று அழைக்கப்படுகிறார்கள்.
➢ இவர்கள் வாழ்ந்ததற்கான அடையாளங்கள் ஆப்பிரிக்காவில் அதிகமாகக் காணப்படுகின்றன.
➢ இந்தியாவில் அவை அரிதாகவே உள்ளன.
➢ இராபர்ட் புரூஸ்ஃபூட் புதை படிவத்தின் ஒரு பகுதியை கண்டெடுத்ததாகச் சொல்லப்படுகிறது.

4. **இடைக்கற்காலப் பண்பாடு : குறிப்பு வரைக.**
➢ இந்தியாவில் இடைக்கற்கால பண்பாடு ஏறத்தாழ பொ.ஆ.மு. 10,000இல் தோன்றியது.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



- விலங்குகளை வேட்டையாடுதல், தாவர உணவுகளைச் சேகரித்தல், மீன் பிடித்தல் முக்கிய தொழிலாக இருந்தன.
- இக்கால மக்கள் நெருப்பைப் பயன்படுத்தினர்.
- கானிவால், லோத்கேஸ்வர், ரத்தன்பூர், ஆதம்கார், பிம்பெட்கா ஆகிய இடங்களில் இக் காலத்தின் வாழிடங்கள் கண்டறியப்பட்டுள்ளது.

**5. ஹரப்பா நாகரிகம் வெவ்வேறு கட்டங்களாக எவ்வாறு பிரிக்கப்பட்டுள்ளது ?**

ஹரப்பா நாகரிகம் பல்வேறு கட்டங்களாக பின்வருமாறு பிரிக்கப்பட்டுள்ளது.

- தொடக்ககால ஹரப்பா பொ.ஆ.மு.3000-2600
- முதிர்ச்சி அடைந்த ஹரப்பா பொ.ஆ.மு. 2600 -1900
- பிற்கால ஹரப்பா பொ.ஆ.மு. 1900 - 1700

**6. பெருங்குளம் : சிறு குறிப்பு வரைக.** மார்ச்-2019 ஆகஸ்ட்-2022

- மொகஞ்சாதாரோவின் சிறப்புக்குரிய பொது இடம் முற்றத்துடன் கூடிய பெரிய குளமாகும்.
- குளத்தின் நான்கு பக்கங்களிலும் உள்ள நடை பாதையில் வடக்கு, தெற்கு பக்கங்களில் படிக்கட்டுகள் உள்ளன.
- நடைபாதையின் அருகே பல அறைகள் உண்டு.
- கழிவுநீர் வடிகால் வசதி இருந்தது.
- பெருங்குளம் சடங்குகளுடன் தொடர்புடைய நீராடல் நிகழ்வுகளுக்குப் பயன்படுத்தப்பட்டிருக்கலாம்.

**7. சிந்து நாகரிகத்தின் வீழ்ச்சிக்கான காரணங்களைக் கூறுக.** மே-2022

- பொ.ஆ.மு. 1900இல் சிந்து சமவெளி நாகரிகம் வீழ்ச்சி அடைந்தது.
- காலநிலை மாற்றம், மெசபடோமியாவுடனான வணிகத்தில் ஏற்பட்ட வீழ்ச்சி ஆகியவை வரலாற்றாசிரியர்களால் கணிக்கப்படுகின்றன.
- படையெடுப்பு, வெள்ளம், ஆறு தன் போக்கை மாற்றிக் கொண்டது ஆகியவை காரணமாக அமையலாம்.

## கூடுதல் வினாக்கள்

**1. ஹோமோ எரக்டஸ் : குறிப்பு வரைக.**

- மனித இனத்தின் மூதாதையர் முதலில் ஆப்பிரிக்காவில் தோன்றி, பின்னர் உலகத்தின் வெவ்வேறு பகுதிகளுக்கு இடம் பெயர்ந்தனர்.
- இவ்வாறு ஆப்பிரிக்காவை விட்டு வெளியே முதன் முதலாக இடம் பெயர்ந்த மனித இனம் ஹோமா எரக்டஸ் ஆகும்.
- இவர்கள் ஹோமோ சேப்பியன்ஸை போல மேம்பட்ட மொழியைக் கொண்டிருக்கவில்லை.
- சில ஒலிகள், மற்றும் சைகைகளைச் சார்ந்த மொழியை பயன்படுத்தி இருக்கலாம்.

**2. நர்மதை மனிதன் குறிப்பு வரைக.**

- இந்தியாவில் நன்கு அறியப்பட்ட ஹோமினின் புதை படிவம் மத்திய பிரதேசத்திலுள்ள ஹோசங்காபாத் அருகேயுள்ள ஹத்னோராவில் கண்டுபிடிக்கப்பட்டது ஆகும்.
- அது ஒரு மண்டை ஓட்டின் மேல் பகுதி.
- இதை நர்மதை மனிதன் என்று தொல்லியல் ஆய்வாளர்கள் குறிப்பிடுகிறார்கள்.
- ஆர்க்கைக் ஹோமோ சேப்பியன்ஸ் என்னும் மனித இனம் வாழ்ந்ததற்கான அடையாளமாக இது கருதப்படுகிறது.

**3. இடை பழங்கற்காலம் நாகரிகம் பரவியிருந்த இடங்களை கூறுக.**

நர்மதை, கோதாவரி, கிருஷ்ணா, யமுனை உள்ளிட்ட ஆறுகளின் சமவெளிகளில் இடைபழங்கற்கால நாகரீகங்கள் பரவி இருந்தன.

**4. ஹரப்பா மக்களின் கலைத்திறன் மற்றும் பொழுது போக்கு குறித்து குறிப்பு தருக.**

**கலைத்திறன்**

- ஹரப்பா நாகரிகப் பகுதிகளிலிருந்து கிடைக்கும் சுடுமண் உருவங்கள், மட்பாண்டங்களில் காணப்படும் ஓவியங்கள், வெண்கல உருவங்கள் ஆகியவை ஹரப்பா மக்களின் கலைத்திறனை உணர்த்துகின்றன.
- ஸ்டீட்டைட் கல்லில் அமைந்த மதகுரு, செம்பாலான நடனமாடும் பெண், ஹரப்பா மொகஞ்சாதாரோ, டோலாவிரா ஆகிய இடங்களில் கிடைத்த கல் சிற்பங்கள் ஹரப்பாவின் கலைப் படைப்புகள் ஆகும்.

**பொழுதுபோக்கு :**

பொம்மை வண்டிகள், கிலுகிலுப்பைகள், சக்கரங்கள், பம்பரங்கள், சதுரங்க விளையாட்டில் பயன்படுத்தப்படும் காய்கள், கட்டங்கள் வரையப்பட்ட பலகைகள் ஆகியவை ஹரப்பா மக்களின் பொழுதுபோக்கு விளையாட்டுக்குச் சான்றாகும்.

## III. சுருக்கமான விடை தருக.

**1. அச்சூலியன் சோஹானியக் பண்பாடுகளின் கருவித் தொழில் நுட்பம் குறித்து எழுதுக.**

**அச்சூலியன் :**

- கை கோடரி வகைக் கருவிகளைக் கொண்ட மரபு அச்சூலியன் மரபு என்றும் அழைக்கப்படுகிறது.
- அச்சூலியன் மரபு பெருமளவில் கோடரிகளையும், வெட்டுக்கத்திகளையும் கொண்டது.

**சோகனியன் :**

- கூழாங்கல்லைச் செதுக்கி உருவாக்கப்படும் கருவிகளைக் கொண்ட மரபு சோகனியன் என்றும் அழைக்கப்படுகிறது.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



- சோகனிய மரபு துண்டாக்கும் கருவிகளையும் அதைச் சார்ந்த வேலைகளுக்கான கருவிகளையும் மட்டுமே கொண்டது.

**2. இந்தியாவின் இடைப்பழங்கற்காலத்தின் முக்கியக் கூறுகளை எழுதுக.** மார்ச்-2019 மார்ச்-2023

- இடைப்பழங்கற்கால மனிதர்கள் திறந்த வெளியிலும், குகைகளிலும், பாறைப்படுகைகளிலும் வசித்தார்கள்.
- வேட்டையாடுபவர்களாகவும், உணவைச் சேகரிக்கப் படுபவர்களாகவும் இருந்தார்கள்.
- சிறிய கருவிகளை பயன்படுத்தினர். கோடரியைப் பயன்படுத்தும் பழக்கம் குறைந்தது.
- கற்கருவிகள் உற்பத்தியில் செர்ட், ஜாஸ்பர், கால்சிடெனி குவார்ட்ஸ் ஆகிய கற்களை மூலப் பொருள்களாக பயன்படுத்தினர்.

**3. இடைக்கற்கால நாகரிகம் நிலவிய இடங்களைக் குறிப்பிடுக.**

- பயிஸ்ரா (பீகார்) லங்னஜ் (குஜராத்)
- உத்திரப்பிரதேசத்தில் - பாகர் II, சோபனி, மண்டோ, சாராய் நகர் ராய், மகாதகா, தம்தமா
- ஆந்திராவில் - சனகனகல்லு
- கர்நாடகாவில் - கிப்பன ஹள்ளி
- தமிழ்நாட்டில் - தூத்துக்குடி ("தேரிகுன்றுகள்")
- மத்திய பிரதேசம் - ஆதம்கார், பிம்பெட்கா ஆகிய பாறை வாழிவிடங்கள் கண்டறியப்பட்டுள்ளது.

**4. இடைக்கற்காலப் பண்பாடுகளின் குறிப்பிடத் தக்க பண்புகள் யாவை ?**

- இடைக்கற்கால மக்கள் ஓரளவு நிரந்தர மற்றும் தற்காலிக குடியிருப்புகளில் வசித்தனர்.
- குகைகளிலும், திறந்த வெளிகளிலும் வசித்தனர்.
- இக்கால மக்கள், நெருப்பை பயன்படுத்தினர். இறந்தோரைப் புதைத்தார்கள்.
- அவர்களுக்குக் கலைதிறன் இருந்ததை பிம்பிட்கா போன்ற இடங்களில் கிடைக்கும் சான்றுகளிலிருந்தும் அறியலாம்.
- அவர்களின் நுண்கருவிகள் சிறிய விலங்குகளையும் பறவைகளையும் வேட்டையாட உதவின.

**5. சிந்து நாகரிகம் நிலவிய பகுதியின் எல்லைகளைக் குறிப்பிடுக.**

சிந்து நாகரீகமும் அதன் சமகால பண்பாடுகளும் இந்தியாவிலும் பாகிஸ்தானிலுமாக 1.5 மில்லியன் ச.கிலோ மீட்டர் பரப்பளவில் உள்ளன.

**எல்லைகள் :**

- மேற்கில் பாகிஸ்தான் ஈரான் எல்லையில் அமைந்துள்ள சட்காஜென்டோர் குடியிருப்புகள். வடக்கில் ஷார்ட்டுகை (ஆப்கானிஸ்தான்) கிழக்கில் ஆலம் பூர்ஜிர் (உத்தரபிரதேசம்)
- தெற்கில் தைமாபாத் (மஹாராஷ்டிரம்) என சிந்து நாகரீகப் பகுதிகளின் எல்லைகளாக வரையறுக்கப் பட்டுள்ளன.
- இதன் மையப் பகுதிகள் பாகிஸ்தானிலும் இந்தியாவில் குஜராத், ராஜஸ்தான், ஹரியானா ஆகிய மாநிலங்களிலும் உள்ளன.

**6. ஹரப்பா பொருளாதாரத்துக்குப் பங்களித்த கைவினைத் தயாரிப்பு குறித்து எழுதுக.** செப்-2020 மே-2022

- மணிகள் மற்றும் அணிகலன் செய்தல், சங்கு வளையல் செய்தல், உலோக வேலைகள் ஆகியவை கைவினைச் செயல்பாடுகளாக இருந்தன.
- கார்னிலியன் (மணி) ஜாஸ்பர், கிரிஸ்டல் (படிகக்கல்) ஸ்டீட்டைட் (நுரைக்கல்) ஆகியவற்றிலும்,
- செம்பு, வெண்கலம், தங்கம் ஆகிய உலோகங்களிலும்
- சங்கு, பீங்கான், சுடுமண் ஆகியவற்றிலும் அணிகலன்களைச் செய்தார்கள், இவைகள் எண்ணற்ற வடிவமைப்பிலும் வேலைப்பாடுகளுடன் செய்யப்பட்டன.
- இவை மெசபட்டோமியாவுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன.

**7. ஹரப்பா மக்களின் 'நம்பிக்கைகள்' குறித்து நீங்கள் அறிந்தது என்ன ?** மார்ச்-2020 ஆகஸ்ட்-2022

- சிந்து மக்கள் இயற்கையை வழிபட்டார்கள், அரச மரத்தை வழிப்பட்டிருக்கிறார்கள்.
- சில கிடைத்த சுடுமண் உருவங்கள் தாய் தெய்வத்தை போல் உள்ளன.
- காலிபங்கனில் வேள்வி பீடங்கள் காணப்பட்டுள்ளன.
- ஹரப்பா மக்கள் இறந்தோரைப் புதைத்தனர், புதைப்பதற்கான நடைமுறைகள் விரிவாக இருந்தன.
- இறந்த உடல்களை எரித்ததற்கான சான்றுகளும் கிடைத்துள்ளன.
- ஹரப்பா புதை குழிகளில் மட்பாண்டங்கள், அணிகலன்கள், தாமிரக் கண்ணாடி, மணிகள் ஆகியவை கிடைத்துள்ளன.
- இறப்பிற்கு பின்னரான வாழ்க்கையைப் பற்றிய அவர்களின் நம்பிக்கையை வெளிப்படுத்துகின்றன.

## கூடுதல் வினாக்கள்

**1. புதிய கற்கால புரட்சி - வரையறு.**

தொடக்க நிலைப் புதிய கற்காலப் பண்பாட்டு காலத்தில்

- ஆறுகளின் மூலம் படியும் செழிப்பான மண் வேளாண்மையை மேம்படுத்தி, படிப்படியாக தானிய உற்பத்தியில் உபரியின் அளவை அதிகரித்தது.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



- பழம் பெரும் நாகரிகங்களின் தோற்றத்துக்கு உபரி உணவு உற்பத்தியே மிக முக்கிய காரணமாகும்.
- பெரிய கிராமங்கள் தோன்றின.
- மட்பாண்டங்கள் செய்யும் தொழில் வளர்ந்தது.
- நிரந்தர இருப்பிடங்கள் கட்டப்பட்டன.

எனவே பண்பாட்டு வளர்ச்சிகள் மொத்தமாக புதிய கற்காலப் புரட்சி எனப்படுகின்றன.

**2. ஹரப்பா மக்களின் வாழ்வாதாரமும் பொருளாதார உற்பத்தியும் பற்றி கூறுக.**

- ஹரப்பா மக்கள் நிலையாக வாழ்வதற்கு வேளாண்மை முக்கிய ஆதாரமாக விளங்கியது.
- கோதுமை, பார்லி, அவரை வகைகள், கொண்டைக் கடலை, எள் வெவ்வேறு தினை வகைகள் உள்ளிட்ட பல்வேறு பயிர்களை பயிரிட்டார்கள்.
- வேளாண்மையில் கிடைத்த உபரி வருவாய் முக்கியமான பல செயல்பாடுகள், பொருளாதார வளர்ச்சிக்கு ஆதாரமாக விளங்கியது.
- ஹரப்பா மக்கள் இரட்டைப்பயிரிடல் முறையைப் பின்பற்றினார்கள், பாசனத்துக்கு கால்வாய்களையும் கிணறுகளையும் பயன்படுத்தினார்கள்.

**3. ஹரப்பா பண்பாட்டின் அரசியல் முறைகளை கூறுக.**

- மட்பாண்டங்கள், முத்திரைகள், எடைக்கற்கள், செங்கற்கள், ஆகியவற்றில் காணப்படும் சீரான தன்மை அரசியல் முறை செயல்பட்டதை உணர்த்துகிறது.
- அதிகாரம் படைத்த ஆட்சி அமைப்பில் ஹரப்பா மற்றும் மொஹஞ்சாதாரோ நகர அரசுகளுக்கான ஆட்சி அமைப்பின் கீழ் இயங்கி இருக்கலாம்.
- பண்பாட்டுப் பொருள்களிலும் அளவீடுகளிலும் காணப்படும் சீரான தன்மை ஹரப்பா சமூகம் உறுதியான மைய நிர்வாகத்தின் கீழ் இயங்கி இருக்க வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்துகிறது.

## IV. விரிவான விடை தருக.

**1. வரலாற்றுக்கு முந்தைய இந்தியா குறித்து விளக்குக.** செப்-2020 மே-2022

- எழுத்துமுறை தோன்றுவதற்கு முந்தைய கால கட்டம் வரலாற்றுக்கு முந்தைய காலம் எனப்படுகிறது. இது கற்காலம் எனவும் குறிக்கப்படுகிறது.
- கற்காலத்தில் இந்தியா, பாகிஸ்தான், இலங்கை, நேபாளம், வங்க தேசம் ஆகியவை அடங்கிய தென்கிழக்கு ஆசியா முழுவதையும் ஒரே பகுதியாகக் குறிப்பதாகும்.
- வரலாற்றுக் காலத்துக்கு முந்தைய மனிதர்கள் இந்தியாவில் 10 இலட்சம் முதல் 20 இலட்சம் வரையான ஆண்டுகளுக்கு முன்பே இருந்தார்கள் எனத் தெரிகிறது.
- எழுத்து தோன்றுவதற்கு முந்தைய காலம் கற்காலம், வெண்கலக்காலம், இரும்புக்காலம் எனப் பிரிக்கப்படும்.
- அம்மக்கள் பயன்படுத்திய பொருள்கள் அல்லது அவர்கள் வாழ்ந்த நிலப்பகுதி, நாகரிகம் நிலவியதாகக் கண்டறியப்பட்ட முதல் இடம் ஆகியவற்றின் அடிப்படையிலேயே அப்பண்பாடுகளுக்குப் பெயர்கள் சூட்டப்படுகின்றன.
- வரலாற்றுக்கு முந்தையக் காலத்தை பழங்கற்காலம், இடைக்கற்காலம், புதிய கற்காலம் எனப் பிரிக்கப்படுகிறது.

**2. கீழ் மற்றும் இடைப்பழங்கற்காலப் பண்பாடுகளை ஒப்பிடுக.**

| கீழ் பழங்கற்கால பண்பாடு | இடைப்பழங்கற்காலப் பண்பாடு |
|---|---|
| 2 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு இருந்து 60,000 ஆண்டுகளுக்கு முன்பு வரை கீழ் பழங்கற்காலப் பண்பாடு தொடர்ந்து இருந்தது. | 3,85,000 - 40,000 உட்பட்ட கால கட்டத்தில் நிலவியதாக கணக்கிடப்பட்டுள்ளது. |
| இக்காலக்கட்டத்தில் வாழ்ந்தவர்கள் ஹோமோ ஏரக்டஸ் என்ற வகையினர் வாழ்ந்துள்ளனர் | இக்காலக்கட்டத்துக்கும் ஹோமோ ஏரக்டஸ் வகையினர் வாழ்ந்துள்ளனர். |
| இராபர்ட் புரூஸ்ஃபூட் என்பவர் சென்னை அருகில் உள்ள பல்லாவரத்தில் இக்காலத்தை சேர்ந்த கருவிகளை 1863ல் கண்டறிந்தார். | H.D சங்கிலியா என்பவர் பிரவாரா ஆற்றங்கரையில் நெவாசா என்ற இடத்தில் இக்காலக் கட்டத்தை முதலில் அடையாளம் கண்டார். |
| மத்திய இந்தியா, இந்தியாவின் தென் கிழக்குப் பகுதி சென்னைக்கு அருகிலும் வாழ்ந்துள்ளனர். | நர்மதை, கோதாவரி, கிருஷ்ணா, யமுனா உள்ளிட்ட ஆறுகளில் சமவெளிகளில் வாழ்ந்துள்ளனர். |



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



| | |
|---|---|
| வேட்டையாடியும், கிழங்கு கொட்டை, பழம் ஆகியவற்றை சேகரித்து வாழ்ந்தனர். | வேட்டை ஆடுபவர்களாகவும் உணவை சேகரிப்பவர்களாகவும் வாழ்ந்தனர். |
| திறந்த வெளியிலும் ஆற்றுச் சமவெளிகளிலும், குகைகளிலும் வசித்தனர். | திறந்த வெளிகளிலும், குகைகளிலும், பாறை படுகைகளிலும் வசித்தனர். |
| கற்களைச் செதுக்கி கோடாரி, சிறுகோடாரி செதுக்கி கருவி, பிளக்கும் கருவி, துண்டாக்கும் கருவிகளை உருவாக்கினர். | கைக்கோடாரிகள், பிளக்கும் கருவிகள், துண்டாக்கும் கருவிகள், சுரண்டும் கருவிகள், துளையிடும் கருவிகள் பயன்படுத்தப்பட்டன. |
| பல்லாவரம், குடியம், கர்நாடாகாவில் இசம்பூர், மத்திய பிரதேசத்தில் பிம்பெட்கா ஆகிய இடங்கில் கருவிகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. | செர்ட், காஸ்பர், கால்சிடெனி, குவார்ட்ஸ் ஆகிய கற்களை மூலப் பொருள்களாகப் பயன்படுத்தினர். |

**3. 'காஷ்மீர் பகுதியின் புதிய கற்காலப் பண்பாடு ஹரப்பா நாகரிகத்தின் காலத்தைச் சேர்ந்தது' – கூற்றை நிறுவுக.** மார்ச்-2023

- காஷ்மீர் பகுதியில் நிலவிய புதிய கற்காலப் பண்பாடும் ஹரப்பா நாகரீகமும் ஒரே சம காலத்தவையாகும்.
- காஷ்மீரில் முக்கியமான ஆய்விடமான பர்சாஹோம், பெருங்கற்காலத்துக்கும் சான்றாக உள்ளது.
- புதிய கற்காலத்தில் காஷ்மீரில் வளர்ப்பு விலங்குகளாகச் செம்மறியும், வெள்ளாடும் இருந்தன.
- பர்சாஹோமைச் சேர்ந்த புதிய கற்கால மக்கள் ஹரப்பா மக்களோடு வணிகத்தில் ஈடுபட்டார்கள்.
- புதிய கற்காலத்தில் இரு கட்டங்கள் இங்கு அடையாளம் காணப்பட்டுள்ளன.
  1. செராமிக்
  2. செராமிக் அல்லாதது.

  செராமிக் மட்பாண்டங்களுக்கான சான்றுகள் கிடைக்கின்றன.
- கறுப்பு நிறப் பாண்டங்களையும் அகேட், கார்னிலியன் கல் மணிகளையும் வண்ணம் பூசப்பட்ட பானைகளையும் பயன்படுத்தினார்கள்.
- கோதுமை, பார்லி, பட்டாணி, பருப்பு ஆகியவற்றுக்கான விதைகள் அகழாய்வுகளின் போது கண்டெடுக்கப்பட்டன.
- அக்கால மக்கள் சிவப்பு நிற மட்பாண்டங்களையும் உலோகப் பொருள்களையும் பயன்படுத்தினார்கள்.
- பருப்பு வகை பயன்பாடு அவர்களுக்கு மத்திய ஆசியாவுடன் இருந்த தொடர்பைக் கூறுகிறது. ஹரப்பா நாகரிகத்துடன் இவர்களுக்குத் தொடர்பு இருந்திருக்கலாம்.

**4. தென்னிந்தியாவில் புதிய கற்காலப் பண்பாடு எங்கு நிலவியது ? அதன் முக்கியமான கூறுகளைக் குறிப்பிடுக.**

**தென்னிந்தியாவில் புதிய கற்கால பண்பாடு :**

**புதிய கற்காலப் பண்பாடு நிலவிய இடங்கள் :**

- புதிய கற்காலப் பண்பாடு தென்னிந்தியாவில் முக்கியமாக ஆந்திரப் பிரதேசம், கர்நாடகா, தமிழ் நாட்டின் வடமேற்குப் பகுதி ஆகியவற்றில் நிலவியதாக கண்டறியப்பட்டது.
- கோதாவரி, கிருஷ்ணா, பெண்ணாறு, துங்கபத்திரை, காவிரி சமவெளிகளிலும்,

  கர்நாடாகவில் - சங்கனகல்லு, தெக்கலகோடா, பிரம்மகிரி, மஸ்கி, பிக்லிகல், வட்கல், ஹெமிங்கே, கல்லூர்

  ஆந்திராவில் - நாகார்ஜீனகொண்டா, ராமாபுரம், வீராபுரம்

  தமிழ்நாட்டில் - மையம்பள்ளி

**முக்கிய கூறுகள் :**

- சில தொடக்கக்காலப் புதிய கற்கால ஆய்விடங்கள் சாம்பல் மேடுகளைக் கொண்டுள்ளன.
- புதிய கற்கால வளாகத்தின் ஒரு பகுதியாக 200க்கும் மேற்பட்ட இடங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.
- ஆந்திரப் பிரதேசத்தில் உள்ள உட்னூர், பல்வோய், கர்நாடகத்தில் உள்ள கொடெக்கல், குப்கல், படிகல் ஆகியவை இத்தகைய சாம்பல் மேடுகளைக் கொண்டுள்ளன.
- சாம்பல் மேட்டைச் சுற்றிலும் குடியிருப்புகள் சூழ்ந்திருக்கும் கட்டமைப்பை கொண்டுள்ளது. 200-க்கு மேற்பட்ட அடையாளங்கள் உள்ளன.
- சாம்பரல் மேட்டைச் சுற்றிலும் வீடுகளும் புதை குழிகளும் மனித வாழிடங்களுக்கான சான்றுகள் உள்ளன.

**5. சிந்து நாகரிகம் ஏன் ஹரப்பா நாகரிகம் என அழைக்கப்படுகிறது ?** மார்ச்-2019 ஆகஸ்ட்-2022

- இந்தியாவில் வடமேற்கு பகுதியிலும், பாகிஸ்தானிலும் பொ.ஆ.மு. 3000 கால அளவில் தோன்றிய நாகரிங்களும் பண்பாடுகளும் மொத்தமாக சிந்து நாகரிகம் எனப்படும்.
- இந்நாகரிகம் அடையாளம் காணப்பட்ட முதல் இடம் ஹரப்பா என்பதால் அது ஹரப்பா நாகரீகம் என்றும் அழைக்கப்படுகிறது.
- ஹரப்பா நகாரிகம் பல்வேறு கட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. தொடக்க கால ஹரப்பா, முதிர்ச்சி



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



அடைந்த ஹரப்பா, பிற்கால ஹரப்பா என மூன்று கட்டங்களாகப் பிரிக்கப்படுகிறது.

- ஒரு நகரப் பண்பாட்டிற்கான கூறுகள் முதிர்ச்சி பெற்ற ஹரப்பாவின் காலத்தில் இருந்தது.
- சிந்து சமவெளியை சுற்றிலும் அகழ்வாய்வு செய்து பல இடங்களில் நாகரீக அடையாளம் கிடைத்தாலும் முதன் முதலில் ஹரப்பா என்ற இடத்தில் இந்நாகரிக அடையாளம் கிடைத்ததால் இது ஹரப்பா நாகரிகம் என அழைக்கப்படுகிறது.
- ஹரப்பாவுக்கு முதன்முதலில் பொ.ஆ. 1826 - இல் சார்லஸ் மேசன் வருகை புரிந்தார்.

**6. திட்டமிடப்பட்ட நகரங்களான ஹரப்பா, மொஹஞ்சதாரோ பற்றி எழுதுக.** மார்ச்-2020 மே-2022

**ஹரப்பா :**

- அரண்களால் பாதுகாக்கப்படும் தன்மை, நன்கு திட்டமிடப்பட்ட தெருக்கள், சந்துகள், கழிவுநீர் வசதி ஆகியவை ஹரப்பா நகரங்களில் குறிப்பிடத் தகுந்த கூறுகள்.
- ஹரப்பா மக்கள் கட்டுமானத்துக்குச் சுட்ட, சுடாத செங்கற்களையும், கற்களையும் வீடு கட்ட பயன்படுத்தினர்.
- நகரங்கள் சட்டக வடிவமைப்பைக் கொண்டிருந்தன. கழிவுநீர் வடிகால்கள் திட்ட வட்டமான ஒழுங்குடன் கட்டப்பட்டன.
- வீடுகள் சேற்று மண்ணாலான செங்கற்களாலும் கழிவுநீர் வடிகால்கள் சுட்ட செங்கற்களாலும் கட்டப் பட்டன.
- வீடுகள் ஒன்றுக்கு மேற்பட்ட தளங்களைக் கொண்டிருந்தன.

**மொகஞ்சதாரோ :**

- மொகஞ்சதாரோ ஓர் உயர்ந்த மேடை மீது நன்கு திட்டமிட்டுக் கட்டப்பட்ட நகரம். அது கோட்டைப் பகுதியாகவும், தாழ்வான நகரமாகவும் ஒரு வேறுபட்ட பகுதிகளைக் கொண்டிருந்தது.
- வீடுகளில் சுட்ட செங்கற்களால் தளம் அமைக்கப்பட்ட குளியலறையும் சரியான கழிவுநீர் வடிகாலும் இருந்தன.
- மேல்தளம் இருந்ததை உணர்த்தும் வகையில் சில வீடுகள் படிக்கட்டுகளைக் கொண்டுள்ளன.
- வீடுகளில் பல அறைகள் இருந்தன. பல வீடுகளில் சுற்றிலும் அறைகளுடன் கூடிய முற்றம் அமைந்திருந்தது.
- மொஹஞ்சதாரோவில் உள்ள ஒரு கட்டிடம் சேமிப்பு கிடங்காக அடையாளம் காணப்படுகிறது.

## கூடுதல் வினாக்கள்

**1. சிந்து நாகரிகமும் தமிழ் நாகரிகமும் ஒப்பிடுக.**

- இந்திய வரலாற்றில் நிகழ்ந்த முதல் நகர மயமாக்கத்தின் வெளிப்பாடு சிந்து நாகரிகமாகும்.
- சிந்து நாகரிகம் வடமேற்கு இந்தியாவில் ஒரு முக்கியமான பண்பாட்டு முறைமையாக இருந்த போது, ஏராளமான பண்பாடுகள் இந்தியாவின் வேறு, வேறு பகுதியில் இருந்தன.
- சிந்து எழுத்துக்களின் பொருளை இன்னும் கண்டறிய முடியவில்லை.
- தென்னிந்தியாவில் கண்டெடுக்கப்பட்டுள்ள பெருங் கால தாழிகளில் மெல்லிய கீறல்களாக எழுதப்பட்டுள்ள வாசகங்களும் சில இடங்களின் பெயர்களும் சிந்து நாகரிகத்திற்கு தமிழ் பண்பாட்டுக்கும் இடையேயான உறவை நிறுவ வதற்கான சான்றுகளாக முன் வைக்கப்படுகின்றன.
- தமிழ்நாட்டிலும், தென்னிந்தியாவிலும் இடைக் காலத்திலிருந்து தொடர்ச்சியாக மக்கள் வாழ்ந்து வந்ததற்குப் பல தொல்லியல் சான்றுகள் உள்ளன.
- இவர்களில் சில சமூகங்கள் சிந்து பகுதியிலிருந்து இடம் பெயர்ந்திருக்கலாம்.
- பழந்தமிழகத்தைச் சேர்ந்த ஊர்களான அரிக்கமேடு, கீழடி, உறையூர், போன்றவை இந்தியாவில் நடந்த இரண்டாம் நகர மயமாக்கத்தின் பகுதிகள் ஆகும்.
- இந்த தமிழக ஊர்கள் சிந்து நகரங்களிலிருந்து மிகவும் வேறுபட்டதாக உள்ளன.

**2. இந்தியா ஹரப்பா நாகரிகக் காலத்தில் பல்வேறு பண்பாடுகளின் கலவையாக இருந்தது ஆராய்க.**

- மேய்ச்சல் சமூக மக்கள், வேளாண்மை செய்வோம், வேட்டையாடிகள் - உணவு சேகரிப்பவர்கள், வணிகர்கள் போன்ற பல குழுக்கள் சிந்து பகுதியில் வசித்தனர்.
- இத்தகைய மக்கள் இக்கால கட்டத்தில் கன்னியாகுமரியிலிருந்து - காஷ்மீர் வரையிலும், குஜராத்திலிருந்து அருணாசலபிரதேசம் வரையிலும் பரவி இருக்கலாம்.
- இந்தியாவின் வடமேற்குப் பகுதியில் சிந்து நாகரிகமும் செழிப்புற்றிருந்த போது, பிற பகுதிகளில் பல்வேறு பண்பாடுகள் வளர்ந்து கொண்டிருந்தன.
- இந்திய துணைக்கண்டத்தின் தென் பகுதியிலும் (கேரளா) இலங்கையிலும் வேட்டையாடியும் சேகரித்தும் வாழ்ந்தனர்.
- படகு போக்குவரத்து குறித்த அறிவுடன் இருந்த ஹரப்பா மக்கள் தென்னிந்தியாவுடன் தொடர்பு கொண்டிருக்கலாம். ஆனால் அதற்கு தெளிவான தொல்லியல் சான்றுகள் கிடைக்கவில்லை.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



- தென்னிந்தியாவின் வடபகுதி குறிப்பாக கர்நாடகா, ஆந்திரபிரதேசம் ஆகியவை புதிய கற்கால பண்பாடுகளுடன் மேய்ச்சல் மற்றும் கலப்பைச் சார்ந்த வேளாண்மையிலும் ஈடுபட்டு வந்தன.
- புதிய கற்காலப் பண்பாடு காஷ்மீர் - கங்கைச் சமவெளி ஆகிய வட இந்தியப் பகுதியிலும், மத்திய இந்தியாவிலும் கிழக்கு இந்தியாவிலும் பரவி இருந்த போது தக்காணத்திலும் மேற்கு இந்தியாவிலும் செம்பு கால பண்பாடு நிலவியது.
- இவ்வாறு இந்தியா ஹரப்பா நாகரீக காலத்தில் பல்வேறு பண்பாடுகளில் கலவை நிலப்பகுதியாக விளங்கியது.

**3. 'கருவித் தொழில் நுட்பத்தில், மேல் பழங்கற்காலம் புதுமையை நிகழ்த்தியது' - தெளிவாக்குக.**

- மனிதர்களின் அறிவாற்றல் திறன்களின் மேம்பட்டத் தன்மையை மேல் பழங்கற்கால மக்களிடம் காண முடிகிறது.
- கல்லில் வெட்டுக் கருவிகள் செய்யும் தொழிற் கூடங்கள் இக்கால கட்டத்தில் வளர்ச்சி பெற்றன.
- கருவிகளுக்கான தொழில் நுட்பத்தில் புதுமையை புகுத்தினர்.
- கற்கருவிகள், கத்தி, வாள்போல வெட்டுவாய் கொண்டவையாகவும் எலும்பால் ஆனவையாகவும் அமைந்திருந்தன.
- மேல் பழங்கற்காலத்தில் சிறுகற்களில் செய்யப்பட்ட கருவிகள் அறிமுகப்படுத்தப்பட்டன.
- இவற்றை உருவாக்க சிலிக்கான் செறிந்த மூலப் பொருட்கள் வெவ்வேறு வகைகளில் பயன்படுத்தப்பட்டன.

**4. தொடக்க புதிய கற்காலப் பண்பாடுகளின் குறிப்பிடத்தக்க பண்புகளை விளக்குக.**

**புதியகற்கால தொடக்கம் :**

- வேளாண்மை, விலங்குகளைப் பழக்கப்படுத்துதல் ஆகியவற்றின் தொடக்கமாக புதிய கற்காலம் அமைந்தது.

**பரவல் :** புதிய கற்கால பண்பாட்டின் பழமையான சான்றுகள் எகிப்தின் செழுமை பிறப்பகுதி, மெசபடோமியா, சிந்து பகுதி, கங்கைப் பள்ளத்தாக்கு, சீனா ஆகிய இடங்களில் காணப்படுகின்றன.

காலம் : பொ.ஆ.மு. 10,000 - 5,000

**வேளாண்மை :**

- தாவரங்களையும், விலங்குகளையும் பழக்கப் படுத்தியதின் மூலம் உணவு தானியங்கள் கால்நடைத் தீவனங்கள் ஆகியவற்றின் உற்பத்தியும் விநியோகமும் அளவில் அதிகரித்தன.
- ஆறுகளின் மூலம் படியும் செம்பலான மண் வேளாண்மையை மேம்படுத்தி, படிப்படியாக தானிய உற்பத்தியில் உபரியின் அளவை அதிகரித்தது.

**5. சிந்து நாகரிகத்தை மையமாகக் கொண்டு கீழ்க்கண்டவை குறித்துச் சிறுகுறிப்பு வரைக.**

**(அ) மட்பாண்டம் செய்தல்**

**(ஆ) வணிகமும் பரிவர்த்தனையும்**

**(இ) எடைக்கற்களும் அளவீடுகளும்**

**(ஈ) முத்திரைகளும் எழுத்துகளும்**

**(அ) மட்பாண்டம் செய்தல்**

- ஹரப்பா மக்கள் அன்றாடத் தேவைகளுக்குப் பலவகைப்பட்ட சுட்ட மண்பாண்டங்களைப் பயன்படுத்தினர்.
- மட்பாண்டங்கள் அடர் சிவப்பும் கறுப்பும் கலந்த வண்ணம் பூசப்பட்டிருந்தன.
- அகன்ற பாத்திரத்தை வைப்பதற்கேற்ற தாங்கி நீரைச் சேர்த்து வைக்கும் கலர், துளைகளுடன் கூடிய கலன் கையில் ஏந்துவதற்கு ஏற்ப குறுகிய பிடியுடன் உள்ள கோப்பை.
- நுனி சிறுத்தும் தாங்கும் பகுதி நன்கு அகன்றும் உள்ள கோப்பைகள், தட்டுகள், கிண்ணங்கள் போன்ற பல வகைகளில் மட்பாண்டங்கள் காணப்படுகின்றன.
- அவற்றில் வரையப்பட்டுள்ள ஓவியங்களில் இவைகள், மீன்செதில்கள், ஒன்றையொன்று வெட்டிக் கொள்ளும் வட்டங்கள், கோணல் மாணலான கோடுகள் பக்கவாட்டில் உள்ள பட்டைகள், வடிவியல் கூறுகள், தாவரங்கள், விலங்குகள் ஆகியவை பதிவு செய்யப்பட்டுள்ளன.
- ஹரப்பா நாகரீகத்தைச் சேர்ந்த மட்பாண்டங்கள் நன்கு சுடப்பட்டதாகவும், நுட்பமான வேலைப்பாடுகள் கொண்டதாகவும் இருக்கின்றன.

**(ஆ) வணிகமும் பரிவர்த்தனையும் :**

- ஹரப்பாவின் பொருளாதாரச் செயல்பாடுகளில் வணிகமும் பரிவர்த்தனையும் முக்கிய பங்கு வகித்தன.
- ஹரப்பா மக்களுக்கு மெசபடோமியாவுடன் நெருக்கமான வணிகத் தொடர்பு இருந்தது. அவர்கள் இந்தியாவில் பிற பண்பாடுகளைச் சேர்ந்த மக்களுடனும் தொடர்பு கொண்டிருந்தார்கள்.
- சுமேரிய நாகரிகம் நிலவிய ஓமன் பஹ்ரைன், ஈராக், ஈரான் ஆகிய இடங்களில் ஹரப்பாவைச் சேர்ந்த முத்திரைகளும் பொருள்களும் கிடைத்துள்ளன.
- க்யூனிபார்ம் கல்வெட்டுக் குறிப்புகள் மெசபடோமியாவுக்கும் ஹரப்பாவுக்கும் இடையேயான வணிகத் தொடர்புகளைக் குறிப்பிடுகின்றன.
- ஹரப்பாவில் செய்யப்பட்ட ஜாடி ஓமனிலும், ஹரப்பாவை சேர்ந்த முத்திரைகள், எடைக்கற்கள், தாயக்கட்டைகள், மணிகள் மெசபடோமியாவிலும் கண்டெடுக்கப்பட்டுள்ளன.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



- கார்னிலியன், வைடூரியம், செம்பு, தங்கம், பல வகைப்பட்ட மரங்கள் ஆகியவை ஹரப்பாவிலிருந்து மெசபடோமியாவுக்கு ஏற்றுமதி ஆயின.
- ஹரப்பா மக்கள் இந்தியாவின் வேறு பகுதிகளோடு தொடர்பு கொண்டு, மூலப்பொருள்களைப் பெற்று, அவற்றை மேலும் சில செய்முறைகளுக்கு உட்படுத்தி உற்பத்தியில் ஈடுபட்டார்கள்
- ஹரப்பா நாகரிகப் பகுதிகளில் கிடைக்கும் நிக்கல் பொருள்களும் மெசபடோமியாவுடன் இருந்த தொடர்புக்கு ஒரு சான்றாகும்.

**(இ) எடைக்கற்களும் அளவீடுகளும் :**

- வணிப பரிவர்த்தனைக்காக ஹரப்பாவில் சரியான எடைக் கற்களும் அளவீடுகளும் பயன்படுத்தப்பட்டன. ஹரப்பா நாகரிகப் பகுதிகளிலிருந்து படிகக் கல்லாலான, கன சதுர வடிவ எடைக்கற்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.
- எடைக்கற்கள் இரும முறையை உணர்த்துகின்றன. எடையின் விகிதம் இருமடங்காகும் படி 1 : 2 : 4 : 8 : 16 : 32 என பின்பற்றப்பட்டுள்ளது.
- இம்முறை அணிகலன்களையும் உலோகங்களையும் எடைபோட பயன்பட்டிருக்கலாம்.
- சிறிய எடை அளவீடு இன்றைய அளவீட்டில் ஒரு இஞ்ச் = 1.75 செ.மீ ஆகக் கொள்ளும் விதத்தில் அளவு கோலையும் பயன்படுத்தியிருக்கிறார்கள்.

**(ஈ) முத்திரைகளும் எழுத்து முறையும் :**

**(அ) முத்திரைகள் :**

- ஸ்டீட்டைட், செம்பு, சுடுமண், தந்தம் போன்றவற்றாலான முத்திரைகள் ஹரப்பா நாகரிகப் பகுதிகளில் அதிக அளவில் கண்டெடுக்கப்பட்டுள்ளன.
- போக்குவரத்துக்கு உட்படும் பொருள்கள் மீது குறியீட்டு அடையாளப்படுத்துவதற்காக முத்திரைகள் பயன்பட்டிருக்கலாம்.
- பொருள்களின் உரிமையாளரைக் குறிப்பதற்கு அவை பயன்பட்டிருக்கலாம்.

**(ஆ) எழுத்துமுறை :**

- ஹரப்பா எழுத்துமுறையை இன்று வரைக்கும் நம்மால் விளங்கிக் கொள்ள முடியவில்லை. 5000த்துக்கும் மேற்பட்ட எழுத்துத் தொடர்கள் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன.
- ஹரப்பாவில் கிடைத்தவற்றில் மிக நீளமானதாகக் கருதப்படும் எழுத்துத் தொடர் 26 குறியீடுகளைக் கொண்டுள்ளது. அது திராவிட மொழிக் குடும்பத்தைச் சேர்ந்ததாக இருக்கலாம் என பல அறிஞர்கள் கருதுகின்றனர்.

## V. செயல்பாடுகள் (மாணவர்களுக்கானது)

1. **பழங்கால மக்கள் பயன்படுத்திய பொருள்கள் குறித்து அறிந்துகொள்ள அருகிலுள்ள அருங்காட்சியகத்திற்குச் செல்க.**
2. **பழைய கற்காலக் கருவிகளின் வகைகளைப் படம் வரைக.**
3. **மனிதப் பரிணாம வளர்ச்சியின் வெவ்வேறு படிநிலைகளை விளக்கும் படங்களை சேகரிக்க.**
4. **சிந்து நாகரிகப் பரவலைப் படம் வரைக. அந்த நாகரிகம் நிலவியதாகக் கண்டறியப்பட்டுள்ள இடங்களை அதில் குறிக்கவும்.**

## ஆசிரியரின் வழிகாட்டலுடன் செய்ய வேண்டியவை (மாணவர்களுக்கானது)

1. **இந்தியாவில் நிகழ்ந்த கற்காலம் குறித்த பவர்பாயிண்ட் விளக்கக்காட்சியை உருவாக்குக.**
2. **சிந்து நாகரிகம் குறித்த பவர்பாயிண்ட் விளக்கக்காட்சியை உருவாக்குக.**
3. **இந்தியாவில் நிகழ்ந்த புதிய கற்காலப் பண்பாடுகள் குறித்த பவர்பாயிண்ட் விளக்கக்காட்சியை உருவாக்குக.**
4. **இந்தியாவில் காணப்பட்ட வரலாற்றுக்கு முந்தைய கால கலை குறித்து பவர்பாயிண்ட் விளக்கக் காட்சியை உருவாக்குக.**



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in




## மாதிரி காலக்கோடு – 1

கோரி முகமது கால முக்கிய நிகழ்வுகள் ஏதேனும் ஐந்தினை காலக்கோடு வரைந்து சுட்டிக்காட்டுக.

### அளவுத் திட்டம்

ஒரு அலகு = 10 ஆண்டுகள்




www.Padasalai.Net



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



## காலக்கோடு – 2

**பொ.ஆ.மு. 530 முதல் பொ.ஆ.மு. 230 வரையிலான காலக்கோடு வரைக. முக்கியமான வரலாற்று நிகழ்ச்சிகளை காலக்கோட்டில் குறிக்க.**

**காலக்கோடு**

| முக்கிய நிகழ்வுகள் | ஆண்டுகள் |
|---|---|
| சைரஸ் (பாரசீகப் பேரரசர்) படையெடுப்பு | - பொ.ஆ.மு. 530 |
| நந்தர்கள் மகதத்தில் தங்களது பேரரசை தோற்றுவித்தல் | - பொ.ஆ.மு. 362 |
| அலெக்சாண்டரின் படையெடுப்பு | - பொ.ஆ.மு. 326 |
| அலெக்சாண்டர் மறைவு | - பொ.ஆ.மு. 323 |
| சந்திரகுப்தர் மௌரியர் பேரரசைச் தோற்றுவித்தல் | - பொ.ஆ.மு. 321 |
| சந்திரகுப்தரால் செலியுகஸ் தோற்கடிக்கப்படுதல் | - பொ.ஆ.மு. 301 |
| சந்திரகுப்தருக்குப் பின் பிந்துசாரர் ஆட்சியில் அமர்தல் | - பொ.ஆ.மு. 297 |
| பிந்துசாரர் இறப்பு | - பொ.ஆ.மு. 272 |
| அசோகர் தலைமையில் மூன்றாம் பௌத்த சங்கம் கூடியது | - பொ.ஆ.மு. 250 |
| அசோகரின் மறைவு | - பொ.ஆ.மு. 231 |

## காலக்கோடு – 3

**டெல்லி சுல்தானிய ஆட்சிகளின் 1206 முதல் 1526 வரையிலான காலக்கோடு வரைக. முக்கியமான வரலாற்று நிகழ்ச்சிகளை காலக்கோட்டில் குறிக்க.**

**காலக்கோடு**

| முக்கிய நிகழ்வுகள் | ஆண்டுகள் |
|---|---|
| குத்புதீன் ஐபக் ஆட்சி பொறுப்பேற்றல் | - பொ.ஆ. 1206 |
| குத்புதீன் ஐபக் மறைவு, இல்துமிஷ் ஆட்சி பொறுப்பேற்றல் | - பொ.ஆ. 1210 |
| கியாசுதீன் பால்பன் அரசராதல் | - பொ.ஆ. 1266 |
| கியாசுதீன் பால்பன் மறைவு | - பொ.ஆ. 1287 |
| ஜலாலுதீன் கில்ஜி அரசராதல் | - பொ.ஆ. 1290 |
| ஜலாலுதீன் கில்ஜி மறைவு, அலாவுதீன் கில்ஜி அரசராதல் | - பொ.ஆ. 1296 |
| அலாவுதீன் கில்ஜி மறைவு, முபாரக் கில்ஜி பதவியேற்றல் | - பொ.ஆ. 1316 |
| கியாசுதீன் துக்ளக் பதவியேற்றல் | - பொ.ஆ. 1320 |
| முகமது துக்ளக் பதவியேற்றல் | - பொ.ஆ. 1324 |
| முகமது துக்ளக் மறைவு | - பொ.ஆ. 1351 |
| சையது வம்சம் ஆட்சி ஆரம்பம் | - பொ.ஆ. 1414 |
| லோடி வம்சம் ஆட்சி ஆரம்பம் | - பொ.ஆ. 1451 |
| இப்ராஹிம் லோடி பதவியேற்பு | - பொ.ஆ. 1517 |
| முதலாம் பானிபட் போர், இப்ராஹிம் லோடி மறைவு | - பொ.ஆ. 1526 |



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in


# வரைபடம்

www.Padasalai.Net



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



# புதிய கற்காலப் பண்பாடு






Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



# புதிய கற்காலப் பண்பாடு



இந்திய வரைபடத்தில் அகழ்வாய்வு செய்யப்பட்ட புதிய கற்கால இடங்களை குறிக்கவும்.





Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net
www.CBSEtips.in



# ஹரப்பா பண்பாடு (சிந்து நாகரிகம்)



கீழே குறிப்பிட்ட உள்ள ஆறுகளை குறிக்கவும்
1. சிந்து, 2. ஜீலம், 3. ராவி





Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net
www.CBSEtips.in



# மகாஜனபதங்கள்



இந்திய வரைபடத்தில் முக்கிய ஐந்து மகாஜனபதங்களை குறிக்கவும்



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



# செம்புக்கால இடங்கள்




www.Padasalai.Net



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



# செம்புக்கால இடங்கள்




இந்திய வரைபடத்தில் கீழே குறிப்பிட்ட இடங்களை குறிக்கவும்

1. பலாதால் 2. மஸ்கி 3. கோலாபாய் கசாம் 4. சிரந்த் 5. ரங்பூர் 6. கயதா




Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in




## காலக்கோடு - 1

**கி.பி. 1500 முதல் 1600 வரையிலான காலக்கோடு வரைந்து விஜயநகர – பாமினி பேரரசு கால நிகழ்ச்சிகளில் ஐந்தினை குறித்து விவரிக்கவும்**




## காலக்கோடு - 2


**கி.பி. 1500 முதல் கி.பி. 1550ஆம் ஆண்டு வரையிலான (பாபர் கால போர் நிகழ்ச்சிகள்) காலக்கோடு வரைந்து ஏதேனும் ஐந்து வரலாற்று நிகழ்ச்சிகளை காலக்கோட்டில் குறித்து விளக்கவும்.**




## காலக்கோடு - 3


செப்-2020

**கி.பி. 1530 லிருந்து 1580 ஆம் ஆண்டு வரையிலான காலக்கோடு வரைந்து அதில் ஏதேனும் முக்கிய (முகலாயர் கால) வரலாற்று நிகழ்ச்சிகளை குறித்து விளக்கவும்.**




## காலக்கோடு - 4

**கி.பி. 1600லிருந்து 1700 ஆண்டு வரையிலான காலக்கோடு வரைந்து முகலாயர் ஆட்சிகால முக்கிய நிகழ்வுகளை காலக்கோட்டில் குறித்து விளக்குக.**







Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



## காலக்கோடு - 5


**கி.பி. 1600 முதல் 1700 வரையிலான காலகோடு வரைந்து வரலாற்று நிகழ்ச்சிகளை குறித்தல்**




அளவீடு :
ஒரு அலகு = 10 ஆண்டுகள்

## காலக்கோடு - 6

**மராட்டிய சிவாஜியின் ஆட்சிகால நிகழ்வுகளை காலக்கோட்டில் குறித்து விளக்குக.** மார்ச் 2023




அளவீடு :
ஒரு அலகு = 10 ஆண்டுகள்

www.Padasalai.Net



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



## காலக்கோடு - 7

**கி.பி. 1700 லிருந்து 1800 ஆம் ஆண்டு வரையிலான காலக்கோடு வரைந்து முக்கிய நிகழ்ச்சிகளை குறித்து விளக்குக.**

1700 – 1710 – 1720 – 1730 – 1740 – 1750 – 1760 – 1770 – 1780 – 1790 – 1800

- 1707 ஔரங்கசீப்பின் இறப்பு
- 1731 வார்னா உடன்படிக்கை
- 1746 முதல் கர்நாடகப்போர் ஆரம்பம்
- 1749 இரண்டாம் கர்நாடகப்போர் ஆரம்பம்/ ஆம்பூர் போர்
- 1756 மூன்றாம் கர்நாடகப்போர் ஆரம்பம்
- 1757 பிளாசிப்போர்
- 1760 வந்தவாசிப்போர்/உத்கிர் போர்
- 1761 மூன்றாம் பானிப்பட் போர்
- 1764 பக்சார் போர்
- 1769 மதராஸ் உடன்படிக்கை
- 1773 ஒழுங்குமுறைச் சட்டம்
- 1775 முதல் ஆங்கிலேய மராத்தியப்போர் ஆரம்பம்
- 1780 இரண்டாம் மைசூர் போர் ஆரம்பம்
- 1782 ஹைதர் அலியின் இறப்பு /சல்பை உடன்படிக்கை
- 1783 பாரிஸ் உடன்படிக்கை
- 1784 மங்களூர் உடன்படிக்கை / பிட் இந்தியச் சட்டம்
- 1793 நிலையானநிலவரித்திட்டம்
- 1799 செராம்பூர் சமயப்பரப்புக்குழு வருகை

காலகோடு

## காலக்கோடு - 8

**கி.பி. 1750 லிருந்து 1850 ஆம் ஆண்டு வரையிலான காலக்கோடு வரைந்து முக்கிய போர் நிகழ்ச்சிகளைக் காலக்கோட்டில் குறித்து விளக்குக.**

1750 – 1760 – 1770 – 1780 – 1790 – 1800 – 1810 – 1820 – 1830 – 1840 – 1850

- 1761 மூன்றாம் பானிபட் போர்
- 1775- 1782 முதல் ஆங்கில மராத்திப்போர்
- 1801 தென்னிந்திய கிளர்ச்சி
- 1803 - 1806 இரண்டாம் ஆங்கில மராத்திய போர்
- 1817,1879 மூன்றாம் ஆங்கில மராத்திய போர்
- 1832 இரண்டாம் கரபோஜி மறைவு

அளவீடு :
ஒரு அலகு = 10 ஆண்டுகள்




Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



## காலக்கோடு - 9

**19ஆம் நூற்றாண்டின் சமய சீர்திருத்த இயக்கங்கள் பற்றிய காலக்கோடு வரைந்து குறிக்க**





அளவீடு :
ஒரு அலகு = 10 ஆண்டுகள்

## காலக்கோடு - 10

**கி.பி. 1750 முதல் 1860 வரையிலான காலக்கோடு வரைந்து முக்கிய வரலாற்று நிகழ்ச்சிகளை குறித்து விளக்குக.**

**1750 – 1860 வரையிலான காலக்கோடு**




அளவீடு :
ஒரு அலகு = 10 ஆண்டுகள்



Kindly send me your study materials to padasalai.net@gmail.com


www.Padasalai.Net www.CBSEtips.in



## காலக்கோடு - 11

**கி.பி. 1700 முதல் 1800 வரையிலான காலக்கோடு வரைந்து முக்கிய போர் நிகழ்ச்சிகளை குறிக்க**


**1700 முதல் 1800 வரை காலக்கோடு**




## காலக்கோடு - 12

**19-ம் நூற்றாண்டில் எவையேனும் ஐந்து சமூக சீர்திருத்தவாதிகள் மற்றும் அவர்கள் நிறுவிய அமைப்புகள் பற்றிய காலக்கோடு வரைக.**

மார்ச்-2020






Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



# வரைபடம்

www.Padasalai.Net




Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in


# மராத்தியர் சிவாஜியின் ஆட்சி எல்லை



இந்திய வரைப்படத்தில் மராத்திய சிவாஜி அரசின் எல்லையை வரைந்து கொடுக்கப்பட்டுள்ள இடங்களைக் குறிக்கவும்


1. டாமன் 2. பிரதாப்கர் 3. பெல்லாரி 4. ரத்தினகிரி
5. தஞ்சாவூர் 6. கோலார் 7. கொல்லம்


Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



# பாமினி அரசுகள், விஜயநகர அரசுகள்







Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



# பாமனி அரசுகள், விஜயநகர அரசுகள்




இந்திய வரைப்படத்தில் பாமனி அரசு எல்லையையும்,விஜயநகரஅரசு எல்லையையும் வரைந்து கொடுக்கப்பட்டுள்ள இடங்களைக் குறிக்கவும்

1. அகமது நகர் 2. தலைகோட்டை 3. பீஜப்பூர் 4. ஸ்ரீரங்கம் 5. சிருங்கேரி



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



# அக்பரின் கீழ் முகலாயப் பேரரசு





www.Padasalai.Net



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in









Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



## இந்தியாவில் ஐரோப்பிய வணிகத் தளங்கள்





Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



## அரசு துணைத்தேர்வு - ஆகஸ்ட் 2022

கால அளவு : 3.00 மணி நேரம் மொத்த மதிப்பெண்கள் : 90

**அறிவுரைகள் :** (1) அனைத்து வினாக்களும் சரியாக பதிவாகி உள்ளதா என்பதை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின், அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

(2) நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும். படங்கள் வரைவதற்கு பென்சில் பயன்படுத்தவும்.

### பகுதி - I

**குறிப்பு** : i) **அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும். **20 x 1 = 20**

ii) கொடுக்கப்பட்டுள்ள மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

1. ................ கல்வெட்டுக் குறிப்புகள் மெசபடோமியாவுக்கும், ஹரப்பாவுக்கும் இடையேயான வணிகத் தொடர்புகளைக் குறிப்பிடுகின்றன.
 **அ) க்யூனிபார்ம்** ஆ) ஹைரோக்ளைபிக்ஸ்
 இ) தேவநாகரி ஈ) கரோஷ்டி
2. கீழ்க்காணும் இணைகளில் எந்த இணை தவறானது?
 அ) சேனானி - படைத்தளபதி ஆ) கிராமணி - கிராமத் தலைவர்
 இ) பலி - தன்னார்வத்தால் கொடுக்கப்பட்டது **ஈ) புரோகிதர் - ஆளுநர்**
3. ................. வேளாண்மை முறையை மேம்படுத்தியதில் முக்கியப் பங்காற்றியது.
 **அ) இரும்பு** ஆ) வெண்கலம்
 இ) செம்பு ஈ) பித்தாளை
4. .............. என்ற இலங்கையில் கிடைத்த பாலியில் எழுதப்பட்ட விரிவான வரலாற்று நூல், மௌரியப் பேரரசு பற்றி அறிந்து கொள்ள உதவும் முக்கியமான சான்றாகும்.
 **அ) மகாவம்சம்** ஆ) தீபவம்சம் இ) பிராமணம் ஈ) முத்ராராட்சசம்
5. ........... ராஜசூய யாகத்தை நடத்தினார்.
 **அ) பெருநற்கிள்ளி** ஆ) முதுகுடுமிப் பெருவழுதி
 இ) சிமுகா ஈ) அதியமான்
6. ................ க்குக் "கவிராஜா" என்ற பட்டம் அளிக்கப்பட்டது.
 அ) முதலாம் சந்திரகுப்தர் **ஆ) சமுத்திரகுப்தர்**
 இ) இரண்டாம் சந்திரகுப்தர் ஈ) ஸ்ரீகுப்தர்
7. அயல்நாட்டு வணிகர்கள் ................ என்று அறியப்பட்டனர்.
 அ) பட்டன்சாமி **ஆ) நானாதேசி** இ) விதேசி ஈ) தேசி
8. .................... ஒரு கலத்துக்குச் சமம் ஆகும்.
 **அ) 28 கி.கி.** ஆ) 27 கி.கி. இ) 32 கி.கி. ஈ) 72 கி.கி.
9. ................. பாண்டியர்களின் முதல் தலைநகரமாகும்.
 அ) மதுரை ஆ) காயல்பட்டினம் **இ) கொற்கை** ஈ) புகார்
10. கிருஷ்ண தேவராயர் தன் வெற்றிகளின் நினைவாக வெற்றித்தூணை எழுப்பிய இடம் :
 அ) பெல்காம் ஆ) கட்டாக் **இ) சிம்மாச்சலம்** ஈ) இராஜமகேந்திரவரம்
11. இராமானந்தரின் சீடர் ....................
 அ) சைதன்யர் ஆ) மீராபாய் இ) குருநானக் **ஈ) கபீர்**
12. சமண மத்திலிருந்தபோது அப்பர் ............. என அறியப்பட்டார்.
 அ) அரிசேனா ஆ) தீர்த்தங்கரர் இ) சிவஞான சித்தியார் **ஈ) தர்மசேனர்**



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



## அரசு பொதுத் தேர்வு - மார்ச் 2023

[கால அளவு : 3.00 மணி நேரம்] [மொத்த மதிப்பெண்கள் : 70]

**அறிவுரைகள் :** (1) அனைத்து வினாக்களும் சரியாக பதிவாகி உள்ளதா என்பதை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின், அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

(2) நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும். படங்கள் வரைவதற்கு பென்சில் பயன்படுத்தவும்.

### பகுதி - I

**குறிப்பு : i) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.**

**ii) கொடுக்கப்பட்டுள்ள மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.** **20 x 1 = 20**

1. இந்தோ-கிரேக்க கலை மற்றும் சிற்பப் பாணி _______ என்று குறிப்பிடப்பட்டது.
அ) பாக் கலை ஆ) மதுரா கலை இ) பாலா கலை **ஈ) காந்தாரக் கலை**

2. விஜயநகர அரசின் அரச முத்திரை _______.
அ) மீன் **ஆ) பன்றி** இ) வில் ஈ) புலி

3. காம்போஜம் என்பது தற்போது _______ என அழைக்கப்படுகிறது.
அ) ஆனம் ஆ) அஸ்ஸாம் **இ) கம்போடியா** ஈ) சுமத்ரா

4. வரலாற்றின் தொன்மையான காலம் _______.
அ) செம்புக் காலம் **ஆ) பழங் கற்காலம்** இ) இரும்புக் காலம் ஈ) புதிய கற்காலம்

5. கஜினி மாமுது இந்தியாவுக்குள் _______ முறை இராணுவத் தாக்குதல்கள் நடத்தினார்.
அ) 18 ஆ) 15 இ) 19 **ஈ) 17**

6. இக்சவாகுகள் _______ பகுதியில் வலிமை பெற்றிருந்தனர்.
அ) தக்காணப் பகுதி **ஆ) ஆந்திரா-கர்நாடகா** இ) பனவாசி ஈ) ஒடிசா

7. இந்தியாவில் போர்த்துகீசியரின் அரசியல் தலைமையிடம் _______ ஆகும்.
அ) டாமன் **ஆ) கோவா** இ) சூரத் ஈ) டையூ

8. இந்தோ-கிரேக்க அரசர்களில் நன்கறியப்பட்டவர்:
**அ) மினாண்டர்** ஆ) யூதிடெமஸ் இ) ஆன்டியால்ஸைடஸ் ஈ) டெமெட்ரியஸ்

9. பாண்டியர்களின் முதல் தலைநகரம் _______.
**அ) கொற்கை** ஆ) மதுரை இ) புகார் ஈ) காயல்பட்டினம்

10. _______ ஒரு கலத்துக்குச் சமம் ஆகும்.
அ) 32 கி.கி **ஆ) 28 கி.கி** இ) 72 கி.கி ஈ) 27 கி.கி

11. பிரபாகர வர்த்தனர் தனது மகள் ராஜ்யஸ்ரீயை _______ என்பவருக்கு திருமணம் செய்து கொடுத்தார்.
அ) சசாங்கன் **ஆ) கிரகவர்மன்** இ) புஷ்யபுத்திரர் ஈ) தேவகுப்தர்

12. பிரம்மஞான சபை _______ ல் நிறுவப்பட்டது.
அ) பிரான்சு ஆ) இந்தியா
இ) இங்கிலாந்து **ஈ) அமெரிக்க ஐக்கிய நாடுகள்**

13. பொருத்துக:
(1) தன்வந்திரி - (i) சூரிய சித்தாந்தா
(2) வராஹமிகிரர் - (ii) அமரகோஷா
(3) ஆர்யபட்டர் - (iii) பிருஹத் சம்ஹிதா
(4) அமரசிம்மர் - (iv) ஆயுர்வேதா



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



அ) (1)-(iv), (2)-(ii), (3)-(i), (4)-(iii)
ஆ) (1)-(iv), (2)-(iii), (3)-(i), (4)-(ii)
**இ) (1)-(iv), (2)-(iii), (3)-(ii), (4)-(ii)**
ஈ) (1)-(iv), (2)-(i), (3)-(ii), (4)-(iii)

14. கூன் பாண்டியன் என்று அழைக்கப்பட்டவர் _________.
அ) நரசிம்மவர்மன் ஆ) முதலாம் மகேந்திரவர்மன்
இ) சுந்தர பாண்டியன் **ஈ) மாறவர்மன் அரிகேசரி**

15. கொரில்லாப் போர் முறை ________ ன் வலிமையாகத் திகழ்ந்தது.
அ) ஆங்கிலேயர் **ஆ) மராத்தியர்** இ) நாயக்கர் ஈ) முகலாயர்

16. தக்கர்களை அடக்கிய ஆங்கிலேய அதிகாரி __________.
அ) ஜேம்ஸ் ஹாலந்து ஆ) வில்லியம் ஆதம் இ) ஜான் நிக்கல்சன் **ஈ) வில்லியம் ஸ்லீமேன்**

17. ________ நல்ல நிர்வாகம் பற்றிய வழிகாட்டும் நூலாகும்.
அ) ராஜதரங்கிணி **ஆ) அர்த்தசாஸ்திரம்** இ) முத்ராராட்சசம் ஈ) இண்டிகா

18. பைம்பள்ளி ________ மாவட்டத்தில் அமைந்துள்ளது.
அ) தூத்துக்குடி ஆ) கோயம்புத்தூர் **இ) வேலூர்** ஈ) திருநெல்வேலி

19. ________, வேளாண்மை முறையை மேம்படுத்தியதில் முக்கிய பங்காற்றியது.
அ) செம்பு **ஆ) இரும்பு** இ) பித்தளை ஈ) வெண்கலம்

20. **கூற்று :** ஔரங்கசீப் ஆட்சியின் இறுதியில் முகலாயப் பேரரசின் அழிவு ஆரம்பமாயிற்று.
**காரணம் :** ஔரங்கசீப் தக்காண அரசர்களிடம் நட்புறவாக இருந்தார்.
அ) கூற்று தவறு; காரணம் சரி
**ஆ) கூற்று சரி; காரணம் கூற்றின் சரியான விளக்கம் அல்ல**
இ) கூற்று சரி; காரணம் தவறு
ஈ) கூற்று சரி; காரணம் கூற்றின் சரியான விளக்கம் ஆகும்.

## பகுதி - II

**குறிப்பு: எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் 30 - க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.**

**7 x 2 = 14**

21. வரலாற்றுக்கு முந்தைய காலத்துக்கான ஆய்வுக்கு உதவும் சான்றுகள் யாவை? பாடம் - 1
22. இந்தியாவின் இரும்புக்காலம் குறித்து நீவிர் அறிந்ததென்ன? பாடம் - 2
23. மகாவீரருடைய போதனைகளின் மையக்கருத்து என்ன? பாடம் - 3
24. "யவன" என்ற சொல்லுக்குப் பொருள் என்ன? பாடம் - 6
25. ஹர்ஷப் பேரரசு குறித்து அறிய உதவும் கல்வெட்டுச் சான்றுகள் யாவை? பாடம் - 8
26. திருபுறம்பியம் போரைப் பற்றி நீவிர் அறிந்தது என்ன? பாடம் - 9
27. முதலாம் இராஜேந்திரனுக்கான பட்டங்கள் யாவை? பாடம் - 11
28. இராமனந்தரின் போதனைகள் யாவை? பாடம் - 13
29. மாகாணம் மற்றும் மாநிலம் - வேறுபடுத்துக. பாடம் - 17
30. அஷ்டதிக்கஜங்கள் பற்றி சிறு குறிப்பு வரைக. பாடம் - 12

## பகுதி - III

**குறிப்பு: எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் 40 - க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.**

**7 x 3 = 21**

31. இந்தியாவின் இடைப் பழங்கற்காலத்தின் முக்கியக் கூறுகள் யாவை? பாடம் - 1
32. காட்டைத் திருத்தியதில் இரும்பின் பங்களிப்பு குறித்து எழுதுக. பாடம் - 3
33. அசோகர் கலிங்கம் மீது படையெடுத்தது பற்றி நீவிர் அறிவது என்ன? பாடம் - 4
34. முற்கால சோழ அரசர்களில் தலைசிறந்தவன் கரிகாலன் என ஏன் அழைக்கப்படுகிறார்? பாடம் - 5
35. குப்தப் பேரரசின் நிர்வாகப் பிரிவுகளைப் பற்றி எழுதுக. பாடம் - 7
36. இந்தியாவில் கஜினி மாமூதின் இராணுவத் தாக்குதல்களுக்கான காரணங்கள் என்னென்ன? பாடம் - 10



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



37. சோழர் காலத்தில் வசூலிக்கப்பட்ட வரிகள் என்னென்ன? பாடம் - 11
38. முகலாயர் ஆட்சியில் நிறுவப்பட்ட ஐரோப்பியக் குடியேற்றங்களைக் குறிப்பிடுக. பாடம் - 14
39. எம்.ஜி. ரானடே பற்றி குறிப்பு வரைக. பாடம் - 19
40. இரயத்துவாரி முறை பற்றி குறிப்பு வரைக. பாடம் - 17

## பகுதி - IV

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** **7 x 5 = 35**

41. அ) "காஷ்மீர் பகுதியின் புதிய கற்காலப் பண்பாடு ஹரப்பா நாகரிகத்தின் காலத்தைச் சேர்ந்தது" - கூற்றை நிறுவுக. பாடம் - 1

**அல்லது**

ஆ) மௌரிய ஆட்சியமைப்பின் முக்கியக் கூறுகளை விவரிக்கவும். பாடம் - 4

42. அ) மூவேந்தர் அரசுகளுடைய நிர்வாகக் கட்டமைப்பை விவரிக்கவும். பாடம் - 5

**அல்லது**

ஆ) வட இந்தியாவின் நிலை குறித்த யுவான் சுவாங்கின் கருத்துக்கள் யாவை? பாடம் - 8

43. அ) இந்திய வரலாற்றில் இரண்டாம் தரெய்ன் போர் திருப்புமுனையாக அமைந்தது எவ்வாறு? பாடம் - 10

**அல்லது**

ஆ) "சோழர் காலத்தில் உருவாக்கப்பட்ட பாசன, விவசாய நிர்வாகத் திட்டங்கள் அதிக வருமானத்துக்கு வழி வகுத்தன" - ஆராய்ந்து எழுதுக. பாடம் - 11

44. அ) விஜயநகரப் பேரரசின் சமூக மற்றும் பொருளாதார நிலையினை விவரிக்கவும். பாடம் - 12

**அல்லது**

ஆ) முகலாயக் கட்டடக் கலையின் சிறப்பம்சங்களைப் பற்றி ஒரு கட்டுரை வரைக. பாடம் - 14

45. அ) முதலாம் பாஜிராவ் வாழ்க்கையையும் சாதனையையும் பற்றி எழுதுக. பாடம் - 15

**அல்லது**

ஆ) 1865 - ஆம் ஆண்டு இந்திய வனச் சட்டம் பிறப்பிக்கப்பட்டதற்கான சூழ்நிலைகளை விவரிக்கவும். அதன் விளைவுகள் யாவை? பாடம் - 17

46. அ) இந்தியாவில் சமணம் வீழ்ச்சி அடைந்ததற்கான காரணங்கள் யாவை? பாடம் - 3

**அல்லது**

ஆ) கொடுக்கப்பட்ட இந்திய வரைபடத்தில் ஔரங்கசீப் பேரரசில் கீழ்க்கண்ட இடங்களைக் குறிக்கவும்.
i) டெல்லி ii) அலகாபாத் iii) மும்பை
iv) வங்காளம் v) குஜராத்

47. அ) இந்தியாவில் பாபரின் படையெடுப்பைப் பற்றி விவரிக்கவும். பாடம் - 14

**அல்லது**

ஆ) சிவாஜியின் ஆட்சியில் நடந்த முக்கிய நிகழ்வுகள் ஏதேனும் ஐந்தினை காலக்கோட்டில் வரைந்து காட்டுக. பாடம் - 15

www.Padasalai.Net



Kindly send me your study materials to padasalai.net@gmail.com